புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஆகஸ்ட் 01, 2024 • புரட்சி 24 • முழக்கம் 29 • விலை ரூ.3.00

## பல்லடத்தில் குடிஅரசு நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்; கழகத் தலைவர் சிறப்புரை

திருப்பூர் மாவட்டம் பல்லடம் ஒன்றிய திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் குடிஅரசு நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் 29.07.2024 திங்கள்கிழமை மாலை 5.00 மணிக்கு பல்லடம் NGR சாலையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தி.வி.க. பல்லடம் நகர அமைப்பாளர் மு.கோவிந்தராசு தலைமை தாங்கினார். செம்பருதி வரவேற்புரை யாற்றினார். கழகத் தோழர்கள் பழனிச்சாமி, அஜித், கௌதமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடக்க நிகழ்வாக மேட்டூர் டி.கே.ஆர் இசைக் குழுவினரின் பகுத்தறிவு பாடல்கள் பாடப்பட்டன.

தோழர் அனுப்பட்டி சீனி.செந்தேவன் தொடக்க உரையாற்றினார். தொடர்ந்து தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, நவீன மனிதர்கள் அமைப்பின் தலைவர் பாரதி சுப்பராயன், கழக வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன், கழகப் பொருளாளர் துரைசாமி, திமுக பல்லடம் நகரப் பொருளாளர்



குட்டி பழனிச்சாமி ஆகியோர் உரையாற்றினர்

கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் குடிஅரசு இதழின் சாதனைகள் குறித்து சிறப்புரையாற்றினார்.

பொதுக்கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலாளர் பரமசிவம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலாளர் சாகுல் ஹமீது, விசிக பொறுப்பாளர் ரங்கசாமி, திராவிட இயக்கத் தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் பிரகாசு, திண்டுக்கல் மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி, பல்லடம் தாய்த்தமிழ்ப் பள்ளி தாளாளர் ராசேசு கண்ணா மற்றும் கழகத்தின் திருப்பூர், திண்டுக்கல், ஈரோடு வடக்கு மாவட்ட, மாநகர நிர்வாகிகள் - தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.

பொதுக் கூட்டத்தை திவிக திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு நெறியாள்கை செய்தார்.

பல்லடம் பகுதியைச் சேர்ந்த பாலசுப்ரமணியம் பொதுக்கூட்ட மேடையில் கழகத் தலைவர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தார்.

பல்லடத்தைச் சேர்ந்த தோழர் முகில்நிலா மணிகண்டன் பொதுக் கூட்டம் நடத்துவதற்கு ரூ15,000/- நன்கொடையாக வழங்கினார்.

நிறைவாக பல்லடம் ஒன்றிய அமைப்பாளர் சண்முகம் நன்றியுரை ஆற்றினார்.

## பகவத்கீதை பெண்களைத் துப்பாக்கி ஏந்த அனுமதிக்கிறதா?

பாரிஸ் ஒலிம்பிக்கில் துப்பாக்கிச்சுடுதல் போட்டியில் இந்தியாவின் மனு பாக்கர் வெண்கலப் பதக்கத்தை வென்றிருக்கிறார். பெண் ஒருவர் துப்பாக்கிச் சுடுதலில் பதக்கம் வென்றிருப்பது நாட்டிற்கும் பெண் இனத்திற்கும் பெருமை சேர்க்கக் கூடிய வகையில் அமைந்திருக்கிறது. இதை நாம் பாராட்டி வரவேற்கிறோம்.

ஆனால், தனது வெற்றிக்கு காரணம் பகவத் கீதை தான், நான் பகவத்கீதையை ஆழமாகப் படித்தேன். பலனை எதிர்பார்க்காதே கடமையை செய்! உன்னுடைய தலைவிதி உன் கையில் இல்லை. இலக்கு நோக்கி முன்னேறிச் செல் என்ற இந்த மூன்று கருத்துக்களும் தான் என்னை ஊக்கப்படுத்தியது. எனவே பகவத்கீதை தான் இந்த வெற்றிக்கு காரணம் என்று கூறியிருக்கிறார்.

ஒலிம்பிக்கில் பகவத்கீதைக்கு தங்கப் பதக்கம் கிடைத்ததை போல ஊடகங்கள் இதை கொண்டாடி வருகின்றனர். இந்த கருத்து நியாயம் தானா என்பது குறித்து நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பகவத் கீதை எப்போது உருவானது. புத்த மதம் செல்வாக்குமிக்கதாக திகழ்ந்த காலத்தில் அதனுடைய சாக்கிய தத்துவம் மக்களால் கொண்டாடப்பட்டது. இந்த புத்த மதத்தை வீழ்த்துவதற்கு பல்வேறு சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் ஒன்றுதான் ஊடுருவி அழித்தல் முறை. அதன் காரணமாக சாக்கிய தத்துவத்தின் பல கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டு வேதாந்தத்தின் கருத்துகளையும், வர்ணாசிரம கருத்துகளையும் உள்ளே புகுத்தி உருவாக்கப்பட்ட ஒன்றுதான் பகவத் கீதை. இதனுடைய நோக்கம் பவுத்தத்தை ஊடுருவி அழிப்பதாகும். இது பல வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தாகும்.

கடமையை செய் பலனை எதிர்ப்பார்க்காதே என்ற கருத்து யாருக்காக சொல்லப்பட்டது? அரசியல் சட்டத்தில் இன்றுவரை எல்லோரும் எல்லா தொழிலையும் செய்யலாம், நீங்கள் கடமையை செய்யுங்கள் என்று சொல்லப்பட்டது அல்ல. அப்போது இருந்த வர்ணாசிரம தர்மத்தின் கீழ் சாஸ்திரங்கள்



பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என அவரவர்களுக்கு கொடுக்கப்பட்ட கடமைகளை செய், அதற்கான பலனை எதிர்பார்க்காதே என்றுதான் அது கூறுகிறது.

பிராமணனுக்கு சூத்திரன் அடிமை வேலை செய்ய வேண்டும். அதற்கான பலனை எதிர்பார்க்க கூடாது. இதுதான் கடமையை செய் பலனை எதிர்ப்பார்க்காதே என்ற தத்துவத்தின் விளக்கம். இந்த தத்துவம் மானுட குலத்துக்கு சொல்லப்பட்டது அல்ல என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நான்கு வர்ணத்தையும் நான் தான் படைத்தேன், இதை மாற்றுவதற்கு எனக்கே உரிமை இல்லை என்று கிருஷ்ணன் கூறிவிட்டான். இது குணத்தின் அடிப்படையில் சொல்லப்பட்டது தானே ஒழிய பிறப்பின் அடிப்படையில் சொல்லவில்லை என்று பலரும் விளக்கமளித்து வருகின்றனர். இதனை மறைந்த காஞ்சி சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சரஸ்வதி கடுமையாக எதிர்த்து கிருஷ்ணன் பிறப்பின் அடிப்படையில் தான் இதைச் சொன்னார் என்று கூறியிருக்கிறார். பிறப்பு முதல் இறப்பு வரை பிராமணன் பிராமணன் தான், சூத்திரன் சூத்திரன் தான். இதை யாராலும் மாற்ற முடியாது. எனவே இதை குணங்களோடு ஒப்பிட முடியாது என்பது காஞ்சி சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சரஸ்வதியின் கருத்தாகும்.

பெண்களைப் பற்றி என்ன சொல்கிறது கீதை? பெண்களைப் பெற்றெடுத்த உறுப்புகள் பாவம் செய்தவை என்று பகவத்கீதை கூறுகிறது. போரிடு! உடல் தான் அழியும், ஆத்மா அழியாது என்று போரை தூண்டும் ஒரு நூலாகத்தான் பகவத் கீதை இருக்கிறது. இதைத்தான் கிருஷ்ணன் வலியுறுத்துகிறான். ஆகவே போர் வெறியைத் தூண்டுகிற பகவத் கீதை இரஷ்யாவுக்கும் இஸ்ரேலுக்கும் வேண்டுமானாலும் பயன்படக்கூடிய ஒன்றாக இருக்கலாம்.

எனவே பெண்களை அவமானப்படுத்துகிற, சூத்திரர்களை இழிவுபடுத்துகிற, போர் வெறியை தூண்டுகிற ஒரு நூலாகத்தான் பகவத் கீதை இருக்கிறது.

காந்தியை சுட்டுக்கொன்ற கோட்சே-வும் பகவத்கீதையைத் தான் துணைக்கு அழைத்தான். காந்தியை சுட்டுக் கொல்வதற்கு துப்பாக்கியை கையில் எடுத்த கோட்சே, அதனை நியாயப்படுத்துவதற்காக பகவத் கீதையை துணைக்கு அழைத்தான். பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா, தர்மத்தை அழிப்பதற்கு கொலை செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார். அந்த பகவத்கீதையின் அடிப்படையில் தான் காந்தியை சுட்டுக் கொன்றேன் என்று நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்தவர் கோட்சே.

பெண்களுக்கு விதிக்கப்பட்ட தொழில் போர் தொழில் அல்ல என்ற தத்துவத்தை உடைத்தெறிந்து கையில் துப்பாக்கியை ஏந்தி பகவத்கீதைக்கு நேரெதிராக களமிறங்கியுள்ள மனு பாக்கர், தனது வெற்றிக்கு காரணம் பகவத்கீதை தான் என்று பேசியிருப்பது மிகப்பெரும் முரண்பாடு ஆகும். பகவத்கீதையே ஒரு முரண்பாடான நூல் தான். எனவே பகவத்கீதையை கொண்டாடுவதற்கு எந்தவித நியாயமும் இல்லை. அது போர் வெறியை தூண்டுகிற, வர்ணாசிரம தர்மத்தை காப்பாற்றுகிற, பெண்களை இழிபடுத்துகிற ஒரு நூலே.

**விடுதலை இராசேந்திரன்**

### தலையங்கம்

# ஜாதிவாரி கணக்கெடுப்பு ஏன் தேவை?

2011ஆம் ஆண்டிலேயே நடத்தப்பட்டிருக்க வேண்டியது மக்கள் தொகைக் கணக்கெடுப்பை வேண்டுமென்றே தாமதித்துக் கொண்டிருக்கிறது ஒன்றிய பாஜக அரசு. கடந்த 150 ஆண்டுகால வரலாற்றில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தாமதப்படுத்தப்படுவது இதுவே முதல்முறை. கொரோனாவைக் காரணம்காட்டி தள்ளிப்போடப்பட்டு, அதுவே தொடர்கதையாகிக் கொண்டிருக்கிறது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது வெறுமனே மக்கள் தொகையை அறிந்துகொள்வதற்கான கணக்கெடுப்பு அல்ல. சமூக - பொருளாதார தரவுகள் அதற்குள் அடங்கியுள்ளது. அதைவைத்துதான் கொள்கை முடிவுகள், பொருளாதாரத் திட்டமிடல்கள் மேற்கொள்ளப்படும். அரசு நிர்வாகத்திற்கும் அத்தியாவசியத் தேவை.

அதுமட்டுமின்றி, கல்வி- வேலைவாய்ப்பில் நிலவும் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களைய, இடஒதுக்கீட்டைச் செழுமைப்படுத்தவும் ஜாதி வாரியான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மிக அவசியமானது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன் ஜாதி வாரியான கணக்கெடுப்பு விவரங்களும் எடுக்கப்பட்டபோதிலும் இன்னும் வெளியிடப்படவில்லை. எனினும் கடந்த 10 ஆண்டுகளில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடஒதுக்கீட்டிற்கான போராட்டங்கள், கோரிக்கைகளும் மிகப்பெரிய அளவில் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அதற்குரிய தீர்வுகளைக் காண, ஜாதி வாரி கணக்கெடுப்பு மிகுந்த அவசியமானது. அதனால் ஜாதிவாரி கணக்கெடுப்பை உடனடியாக நடத்த வேண்டுமென்று காங்கிரஸ், திமுக உள்ளிட்ட பிரதான எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. குறிப்பாக ராகுல் காந்தி நாடாளுமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் அதற்கான தேவையை வலியுறுத்தி தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்.


ஆனால் ராகுல் காந்தியின் கோரிக்கையை ஏளனப்படுத்திக் கொண்டிருக்கிறது பாஜக அரசு. ராகுல் காந்தியின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் பேசிய ஒன்றிய அமைச்சர் அனுராக் தாக்கூர், “யாருக்கு சுய ஜாதி தெரியாதோ, அவர்தான் ஜாதிவாரி கணக்கெடுப்பை கேட்டுக் கொண்டிருக்கிறார்” என பதில் அளித்திருக்கிறார். இது பாஜகவின் அப்பட்டமான ஜாதிய மனோபாவம். ஜாதியற்றோருக்கான தனி இடஒதுக்கீட்டை வலியுறுத்தும் கட்டத்தை நோக்கி தமிழ்நாடு நகர்ந்துகொண்டிருக்கிறது. ஆனால் ஜாதி தெரியாவிட்டாலே அவமானம் என்பதுதான் பாஜகவின் நிலைப்பாடு என்று அனுராக் தாக்கூரின் பேச்சில் இருந்து புரிந்துகொள்ள முடிகிறது.

பாஜகவின் இந்த மட்டமான அரசியல்போக்கைத் தாண்டி ஜாதிவாரி கணக்கெடுப்பு ஏன் அவசியம் என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது. இதர பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு மட்டுமே வழங்கப்படுகிறது. ஆனால் இப்பிரிவினரின் மக்கள்தொகை 60 விழுக்காட்டிற்கும் அதிகமான இருக்கும் என்பதுதான் கண்கூடு. அவர்களுக்கான கல்வி- வேலைவாய்ப்பு உரிமைகள் நிலைநாட்டப்பட ஜாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அவசியமானது. சமூக ரீதியான ஏற்றத்தாழ்வுகளைக் களைய, எந்த சமூகம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய வேண்டும். நோயை அறிந்து மருத்துவம் செய்வதே பலனைக் கொடுக்கும். நோய் என்னவென்றே தெரியாமல், அதன் தீவிரம் உணராமல் மருத்துவம் பார்ப்பது பலனைத் தராது. ஜாதி என்பது சமூகத்தின் கொடிய நோய். அந்நோயைக் குணப்படுத்த அதன் தீவிரத்தன்மையை அலசி ஆராய்ந்து புள்ளி விவரங்களை எடுக்க வேண்டியது அவசியம்.

இதை அரசியல் கட்சிகளோ, சமூக இயக்கங்களோ மட்டும் வலியுறுத்தவில்லை. நடைமுறையில் உள்ள இடஒதுக்கீடு மற்றும் சமூகநீதியை உறுதிசெய்ய இதர பிற்படுத்தப்பட்ட மக்களின் ஜாதி வாரியான புள்ளி விவரங்கள் இன்றியமையாதவை என்று 1992-இல் இந்திரா சஹானி வழக்கிலேயே தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனாலும் தன்னை பிற்படுத்தப்பட்ட சமூகத்தின் பிரதிநிதியாக மார்தட்டிக் கொள்ளும் நரேந்திர மோடி, ஜாதிவாரி கணக்கெடுப்புக்கு நேரெதிரான சிந்தனையையே கொண்டிருக்கிறார். உயர்ஜாதி ஏழைகளுக்காக உச்சநீதிமன்றத்தின் 50 விழுக்காடு வரம்பைத் தாண்டி, பொருளாதார அடிப்படையில் 10% இடஒதுக்கீடு வழங்கினார். ஆனால் ஓபிசி மக்களுக்கான இடஒதுக்கீட்டை ஒரு விழுக்காடு கூட உயர்த்த முன்வரவில்லை. இப்போது நாடு முழுவதும் பல்வேறு தரப்பில் இருந்து எழும் ஜாதி வாரி கணக்கெடுப்புக்கான குரலையும் மதிக்காமல் அலட்சியப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

அந்த அலட்சியத்திற்குத்தான் உத்தரப் பிரதேச மக்கள் நாடாளுமன்றத் தேர்தலில் சரியான பதிலடியைக் கொடுத்தார்கள். ஒன்றிய பாஜக அரசு, இக்குரலை மேலும் அலட்சியப்படுத்துமானால், பாஜக மேலும் பலவீனப்படும் என்பதில் சந்தேகமில்லை. அரசியல் தளத்தில் வலுவாக எழும் ஜாதிவாரி கணக்கெடுப்புக்கான குரலை முன்னகர்த்திச் செல்ல வேண்டியது நமது கடமை.

# யுபிஎஸ்சி தலைவர் ராஜினாமா பின்னணி!



ஒன்றிய பாஜக அரசின் சிந்தனையில் உருவானதுதான் தேசிய தேர்வு முகமை. வெறும் ஒரு குடியிருப்போர் நலச்சங்கம் போல சொசைட்டியாகப் பதிவு செய்யப்பட இந்த முகமை நீட், ஜேஇஇ என முக்கியமான பல தேர்வுகளை நடத்துகிறது. அதில் பலப்பல மோசடிகள் தற்போது வெளிச்சத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. சமீபத்தில் நடந்த நீட் மருத்துவ நுழைவுத்தேர்வில் வினாத்தாள் கசிவு, ஆள் மாறாட்டம் என பல வகையான மோசடிகள் அம்பலமாகி நாடே கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்த விவகாரத்தில் சிபிஐ வழக்குப் பதிவு செய்து தினமும் பல மோசடி நபர்களைக் கைது செய்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் ஐஏஎஸ், ஐபிஎஸ் போன்ற குடிமைப் பணி இடங்களை நிரப்புவதற்கான ஒன்றிய பணியாளர் தேர்வாணையத்திலும் (யுபிஎஸ்சி) பல மோசடிகள் நடந்திருப்பதற்கான ஆதாரங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இதற்கிடையே பிரதமர் மோடிக்கு நெருக்கமானவரான யுபிஎஸ்சி தலைவர் மனோஜ் சோனி பதவியை ராஜினாமா செய்திருக்கிறார்.

இவரது ராஜினாமா பின்னணி குறித்து பல பரபரப்பு தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

யுபிஎஸ்சி தலைவராக மனோஜ் சோனி கடந்த 2023ம் ஆண்டில் நியமிக்கப்பட்ட போதே எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தன. குஜராத்தைச் சேர்ந்த இவர் பிரதமர் மோடிக்கு நெருக்கமானவர். மேலும், அரசியல் கட்சியை சேர்ந்தவர் போல நடந்து கொள்ளும் மனோஜ் சோனி, எந்த விதத்திலும் யுபிஎஸ்சி தலைவர் பதவிக்கு பொருத்தமான நபராக இருக்க மாட்டார் என காங்கிரசின் ராகுல் உள்ளிட்ட தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் பல எதிர்ப்பையும் மீறி நியமிக்கப்பட்டவர்தான் மனோஜ் சோனி. தற்போது இவர் 5 ஆண்டுகள் பதவிக் காலம் இருக்கும் நிலையில், திடீரென பதவியை ராஜினாமா செய்து விட்டதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. 8 உறுப்பினர்களைக் கொண்டு யுபிஎஸ்சியில் தினேஷ் தாஸ் என்பவரும் குஜராத்தைச் சேர்ந்தவர். பிபி.ஸ்வைன் என்பவரும் குஜராத் கேடர் ஐஏஎஸ் அதிகாரி ஆவார். மொத்தம் 4 ஐஏஎஸ் அதிகாரிகள் போலிச் சான்றிதழ் தொடர்பான விசாரணை வளையத்தில் உள்ளனர்.

சமீபத்தில் புனே பெண் ஐஏஎஸ் அதிகாரி பூஜா கேட்கர் விவகாரத்தில் பல அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளிவந்தன. சுமார் 300 கோடி சொத்துக்கு சொந்தக்காரரான பூஜா கேட்கர், ஆண்டுக்கு ரூ.8 லட்சத்துக்கு கீழ் வருமானம் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர் என பொய்யான ஓபிசி கிரிமிலேயர் சான்றிதழ் சமர்ப்பித்து, பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கான இடஒதுக்கீடு சலுகையைப் பெற்றுள்ளார். ஐஏஎஸ் தேர்வில் 800வது ரேங்க் பெற்ற அவர், மாற்றுத்திறனாளி என போலி மருத்துவச் சான்றிதழ் தந்துள்ளார். பலமுறை யுபிஎஸ்சி தேர்வு எழுதியும் பூஜாவால் வெற்றி பெற முடியவில்லை. இதனால் பல குறுக்கு வழிகளைத் தேட முயன்ற அவர், ஒருகட்டத்தில் தனது அடையாளத்தையும், பெயரையும், அப்பா, அம்மா பெயரையும் மாற்றி, போலிக் போட்டோ, போலி கையெழுத்து, போலி இமெயில் ஐடி, போலி மொபைல் நம்பர், போலி முகவரி என பலப் போலிகளை கொடுத்துதான் ஐஏஎஸ் அதிகாரியாகி இருக்கிறார்.

யுபிஎஸ்சியில் உயர் பதவியில் இருப்பவர்கள் துணை இல்லாமல் இவ்வளவு மோசடிகளையும் ஒருவரால் நிச்சயம் செய்ய முடியாது. அதே சமயம் பூஜா மட்டுமே மோசடி செய்த முதல் ஆளாக இருக்கவும் முடியாது. இவரைப் போல் இன்னும் பல ஆயிரக்கணக்கானோர் மோசடியாக ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகளாகத் தேர்வாகி இருக்கலாம் என்பதால் இதைப் பற்றி விசாரிக்க வேண்டுமென உச்ச நீதிமன்றத்திலும் மனுக்கள் தொடரப்பட்டுள்ளன. இது மட்டுமல்ல இதற்கு முன்பாக கடந்த 2020இல் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவின் மகள் அஞ்சலி பிர்லா ஐஏஎஸ் ஆன விதமும் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியது. ரயில்வே அமைச்சகத்தின் கீழ் பணியாற்றி வரும் அஞ்சலி பிர்லா, மாடலிங் துறையில் இருந்தவர். திடீரென கடந்த 2019ஆம் ஆண்டு முதல் முயற்சியிலேயே யுபிஎஸ்சி தேர்வில் தேர்ச்சி பெற்று ஐஏஎஸ் ஆகி விட்டார்.

யுபிஎஸ்சி தேர்வு எழுதுவோர் 3 நிலைகளைத் தாண்டித்தான் தேர்ச்சியடைய முடியும். முதலில் முதல்நிலை தேர்விலும், இரண்டாவதாக முதன்மைத் தேர்வுகளிலும் தேர்ச்சி அடைய வேண்டும். அதன்பிறகு நேர்காணலிலும் பங்கேற்று சிறப்பாகச் செயல்பட வேண்டும்.

இந்த 3 படிநிலைகளைத் தாண்டினால் தான் இறுதியாக பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில் ஒருவரால் நேரடியாக ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஎப்எஸ் பணிகளில் அமர முடியும். இப்படிக் கடினமான தேர்வில், ஒருசிலர்தான் முதல் முயற்சியிலேயே வெற்றி பெறுகிறார்கள். ஆனால், பலர் 2, 3, 4வது முயற்சிகளில்தான் வெற்றி பெறுகிறார்கள். இன்னும் பலரோ, தொடர்ந்து யுபிஎஸ்சி தேர்வில் தேர்ச்சியடைய முடியாமல் தவிக்கின்றனர்.

இப்படிப்பட்ட நிலையில் ஓம்பிர்லாவின் மகள் மாடலிங் துறையில் இருந்து விட்டு திடீரென ஒரே முயற்சியில் யுபிஎஸ்சி தேர்வில் வெற்றி பெற்றது தான் சந்தேகத்திற்குக் காரணம். தற்போது இந்த விவகாரத்திலும் பெரும் மோசடி நடந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

எனவே நீட் போல யுபிஎஸ்சி தேர்விலும் பணம் படைத்தவர்கள், அதிகாரத்தில் இருப்பவர்கள் ஆதாயம் அடைகிறார்களா என்கிற கேள்வி எழுந்துள்ளது. ஆண்டுதோறும் யுபிஎஸ்சி கனவுடன் நடுத்தர, ஏழ்மை நிலையில் இருக்கும் லட்சக்கணக்கான மாணவர்கள் இரவு பகலாக படித்து தேர்வு எழுதுகின்றனர். அவர்களுக்கு கிடைக்க வேண்டிய பதவியைக் குறுக்கு வழியில் சிலர் தட்டிச் செல்கின்றனர். அதுபோன்றவர்களுக்கு மனோஜ் சோனி போன்ற நபர்கள் மூலமாக ஒன்றிய அரசே துணை நிற்பதுதான் வேதனையின் உச்ச கட்டம். தனக்கு வேண்டிய நபர்களை முக்கிய பொறுப்புகளில் நியமித்து ஒன்றிய அரசே ஊழல்களுக்கு வழிவகுக்கிறதா என்கிற சந்தேகம் எழுவதாக குற்றம்சாட்டுகின்றனர் சமூக ஆர்வலர்கள்.

இதுபோன்ற ஊழல்கள், மோசடிகள் அம்பலாகி வருவதால் முன்கூட்டியே மனோஜ் சோனியைக் காப்பாற்ற ஒன்றிய அரசே இந்த ராஜினாமா நாடகத்தை அரங்கேற்றி இருப்பதாகக் கூறப்படுகிறது.

# மக்களுக்கான விடுதலையை மந்திரங்கள் தராது

**எஸ்.வி.வேணுகோபால்**

மரித்துப்போன 15 வயதுப் பெண்ணை, ‘மீண்டும் உயிரோடு கொண்டுவந்து நிறுத்துவேன்’ என்று சொல்லி, அவரது சடலத்தைத் தனது ஆட்கள் உதவியோடு எடுத்துக்கொண்டு போனவர், காவல் துறையால் அதற்காகக் கைது செய்யப்படுகிறார். ஆனால், அதற்குப் பின்னும் அந்த ஊரே அவரைக் கொண்டாடுகிறது. அப்படியான ஒருவர் குறித்த ‘சாமியார்’ என்னும் பிம்பக் கட்டமைப்பு, ஜூலை 2 அன்று உத்தரப் பிரதேச மாநிலத்தின் ஹாத்ரஸ் நகரை நூற்றுக்கணக்கான அப்பாவிகளின் சவக்கிடங்காக மாற்றிவிட்டது.

ஹாத்ரஸ் நகர நெரிசல் நிகழ்வில் குழந்தைகள் உள்ளிட்ட 121 பேர் பலி என்பது அரசு சொல்லும் கணக்கு என்றாலும், ‘முந்நூறு சடலங்களுக்கு மேல் எண்ணிப் பார்த்தேன்’ என உள்ளூர் மனிதர் ஒருவர் கூறியது ‘தி இந்து’ நாளேட்டில் பதிவாகியுள்ளது. ஒரு பேருந்தின் இருக்கைகள் எல்லாம் சடலங்களால் நிரப்பப்பட்டு இருக்கும் கோரமான ஒரு காட்சியை இதற்குமுன் நாளேடுகளில் பார்த்த நினைவில்லை.

## மூன்று பெண் சடலங்கள்

வினோத் என்பவர் தனது குடும்பத்தில் மூன்று தலைமுறையைச் சார்ந்த மூன்று பெண்களுக்கு இறுதிச் சடங்கு செய்யும் கொடுமைக்கு உள்ளானார். தனது உயிருக்கும் உயிரான மனுஷிகளின் சடலங்கள் அவருக்கு ஓரிடத்திலேயே உடனே கிடைத்து விடவும் இல்லை. மகள் பூமி அலிகரில் கிடைத்தார். ஹாத்ரஸ் மாவட்டத்திலேயே இருந்தது மனைவி ராஜகுமாரியின் சடலம். அன்புத் தாய் ஜெய்மந்தியின் சடலம் கிடைத்தது ஆக்ரா மருத்துவமனை சவக் கிடங்கில்.

ஒரு சதிச்செயல்தான் இந்த அவலத்திற்குக் காரணம் என்று செய்தி பரப்பப்படுகிறது. யாரைக் காணப் பெருங்கூட்டம் அலை மோதியதோ அந்த பாபாவின் பெயரை அதிகார மட்டத்தில் யாரும் உச்சரிக்கக் கூடத் தயங்குவதும், முதல் தகவல் அறிக்கையில் அவர் பெயரே இணைக்கப்படாததும் இன்னும் வேதனை.

தலைமறைவாக இருப்பதாகச் சொல்லப் பட்ட பாபா மூன்றாம் நாள் தானே வெளிப்பட்டு, நடந்த கொடுமையைக் கண்டு அதிர்ச்சி அடைவதாகவும், மரித்துப்போன உயிர்களுக்கு நல்ல கதி கிடைக்கப் பிரார்த் தனை செய்வதாகவும், காவல் துறையின் மீதும் அரசின் மீதும் பெருத்த நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் பேட்டி கொடுக்கிறார். ஏதோ அந்த நிகழ்வுக்கும் தனக்கும் கிஞ்சித் தும் தொடர்பே அற்றவர்போல் ஊடகங்களிடம் சொல்லிவிட்டு, அடுத்த வேலைக்கு இப்படியான ஒரு நபர் போய்க்கொண்டிருப்பது ஒரு ஜனநாயகத்தில் எப்படிச் சாத்தியம் ஆகிறது? இன்னும் ஒருபடி மேலே போய், “விதியை யாராலும் மாற்ற முடியாது. அனைவரும் ஒரு நாள் இறக்கத்தான் வேண்டும்” என்று வேதாந்தம் வேறு பேசியிருக்கிறார் பாபா.

இப்படியான மனிதரின் காலடி மண்ணை யும், வாகனத்தின் டயரடி மண்ணையும்கூடத் தொட்டுத் தலையில் போட்டுக்கொள்ள ஒருவரை ஒருவர் முண்டிய டித்துக்கொண்டு போய் நெரிசலில் சிக்கிக்கொண்ட மக்கள், அந்த மூடநம்பி க்கையில்தான் மூச்சுத் திணறி மாண்டு போயிருக்கின்றனர்.

## விடையில்லா கேள்விகள்

அவசரச் சூழலில் வெளியேறுவதற்கு ஒற்றை வாசல் மட்டுமே இருக்கும் இடத்தில் 80 ஆயிரம் பேர் சத்சங்கத்தில் கூடுவதற்கு அனுமதி அளித்தது எப்படி எனத் தெரியவில்லை. சொல்லப்பட்ட எண்ணிக்கைக்கு மேலாக ஒன்றரை லட்சம் பேர் அங்கே கூடியதை அறிந்த மாத்திரத்தில் போலி பாபா ஓசைப்படாமல், விரைந்து அங்கிருந்து வெளியேற முடிவெடுத்தார். தங்களுக்கு நல்லருள் பாலிக்க வேண்டிய ‘கடவுள் அவதாரம் அங்கிருந்து அகன்று செல்வதைக் கண்டு கூடியிருந்த மக்கள் திரள், அவரை நோக்கி ஓடோடிப் போக எத்தனித்த நேரத்தில் காவல் துறை எங்கிருந்தது?

ஆக்ரா நகரில் “இறந்த பெண்ணை உயிர்ப்பிப்பேன் ‘என்கிற நாடகத்துக்காக மார்ச் 2000இல் சூரஜ் பால் கைது செய்யப் பட்டபோது, அங்கே காவல் துறை அதிகாரி யாகப் பணியாற்றிய தேஜ்வீர் சிங் தான் ஊடகங்களுக்கு அந்தச் செய்தியை இப்போது பகிர்ந்துகொண்டவர். பின்னர் சூரஜ் பால் காவல் துறைப் பணியை உதறிவிட்டு, பாபாவாக அவதாரம் எடுத்தார். அப்போதே அவரது அடியாட்கள் காவல் துறையினர் மீது கல்லெறிந்து ரகளை செய்திருக்கின்றனர். தன்னை ‘போலே பாபா’ என்று அறிவித்துக் கொண்ட சூரஜ் பால், நாராயணன் ஹரி சாகர் என்ற பெயரிலும் அறியப்படலானார். அவரது தலையைச் சுற்றி ஒளிவட்டம் தெரிவதாகவும் அவரிடம் அபார தெய்விக சக்திகள் துலங்குவதாகவும் ஊர் ஊராகப் போய்ச் சொல்வதற்கு ஆட்கள் உருவாகிக் கொண்டே இருந்திருக்கின்றனர். பாபாவின் தரிசனத்துக்காகத் தவம் கிடக்க ஆரம்பித்தனர் பெண்கள். ஹாத்ரஸ் நெரிசல் மரணத்தில் பெண்களும் குழந்தைகளுமே மாண்டு போயிருக்கின்றனர்.

## ஒப்புக்கொடுக்கும் எளிய மக்கள்

வறுமை, பட்டினி, வாழ்க்கைப் பாடுகளில், அன்றாடப் போராட்டங்களின் இருள்பாதையில் உழலும் மனிதர்களுக்கு விழிப்புணர்வு வெளிச்சம் மறைக்கப்பட்டுவிடுகிறபோது, இதுபோன்ற ‘பாபா’க்களின் காலில் விழுகின்றனர். குற்ற உணர்வைத் தூண்டும் பாபாக்களிடம் எளிய மனிதர்கள் தங்களை ஒப்புக்கொடுத்துவிடுகின்றனர்.‘உன் பிரச்சினைக்கு நீதான் பொறுப்பு’ என்கிற சாட்டையடியை மனதார ஏற்றுக்கொண்டு, கண்ணீர் பெருக்கித் தங்களது பாவங்களை அதில் கழுவிக்கொள்ளும் உணர்ச்சித் தூண்டுதலுக்கு ஆட்படுகின்றனர்.

குடும்பங்களில் தங்களது இடையறாத சலிப்பற்ற உழைப்புக்கு எந்த மதிப்பும் பெறாத பெண்கள்,இந்தச் சாமியார்கள் தங்களுக்கு முன்னுரிமை கொடுத்து நடத்தும் விதத்தைக் கண்டு தங்களுடைய விடியலின் வாசல் திறந்ததுபோல் உணர்கின்றனர். வெற்றிகரமான ஆன்மிக வர்த்தகம் நடத்தும் எந்தக் கடவுள் அவதாரமும் பெண்களுக்கு முன்னுரிமை அளிப்பதைக் காண முடியும். உங்களது வாழ்க்கைக் கேள்விகளுக்கான விடையை நீங்கள் ஏன் சத்சங்கங்களில் போய்த் தேடுகிறீர்கள் என்ற கேள்விக்கு, ஹாத்ரஸ் நெரிசலில் கடும் காயங்களோடு தப்பிப் பிழைத்த பெண்களில் ஒருவர் சொன்ன பதில் அதிர வைக்கிறது. ‘ஆண்களுக்குப் புகலிடம் எத்தனையோ இருக்கிறது. நண்பர் களோடு எங்கும் அலைந்து திரிய முடியும். சாராயத்தில் தங்கள் கவலைகளை மூழ் கடித்துக் கொண்டுவிட முடியும். எங்களைப் போன்ற பெண்கள் வேறு எங்கு தான் போய் எங்களது கஷ்டங்களைக் கொட்டித் தீர்க்க முடியும்?’ என்று கேட்கிறார் அவர்.

## நோய் முதல்நாடி

21ஆம் நூற்றாண்டு, நவீனச் சமூகம், வல்லரசுக் கனவு என்று ஓர் இந்தியா இங்கே கற்பிதம் செய்யப்படுகிறது. ஆனால், யதார்த்த இந்தியச் சமூகம் சந்தைப் பொருளாதாரத் துக்கு ஈடுகொடுக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. ஒரு பக்கம் புதுமையின் வேகப் பாய்ச்சல். மறுபக்கம் கால்களைப் பிணைத்திருக்கும் பழைமைவாதச் சிந்தனைச் சங்கிலிகளின் ஓயாத ஓசை. இந்தச் சங்கிலி யைத் தகர்த்துச் சிந்தனைகளுக்கு விடுதலை கிடைக்கச் செய்யத்தான் நரேந்திர தபோல்கர்கள் ஓயாது இயங்கிக்கொண்டே இருந்தனர். கவுரி லங்கேஷ்கள் எழுதிக்கொண்டே இருந்தனர். சப்தர் ஹாஷ்மிகள் நாடகங்களை இயக்கிக்கொண்டிருந்தனர். இவர்கள் அமைதியாக்கப்பட்டனர். வன்முறை ஆயுதங்களால் பறிக்கப்பட்டன அவர்களது உயிர்கள். பெண்ணடிமைச் சிந்தனை, உழைப்புச் சுரண்டல், மூடநம்பிக்கைகளுக்கு ஆராதனை, அநீதிக்கு எதிரான அதிகார மட்டத்தின் மவுனம் எல்லாமே இந்த வன்முறை ஆயுதங்களுக்குக் கூர் தீட்டிக் கொடுக்கிறது. நோயைக் குணப்படுத்த நோய் முதல் நாடிப் பார்க்க வேண்டியது அவசியமாகிறது. ஹாத்ரஸில் மறைந்த மக்களுக்கு இந்தச் சமூகம் மரியாதை தெரிவித்துவிட்டு நகர்வது அவர்களுக்கான நீதியாகாது. விளிம்புநிலை மக்களுக்கு உரிய வாழ்வாதாரம், மருத்துவம், சுகாதாரம், பெற்றோரை இழந்த பிள்ளை களுக்குத் தரமான இலவசக் கல்வி, வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட வேண்டும். பிறப்பை நொந்துகொள்ளவும், வாழ்க்கை யைக் கசந்துகொள்ளவுமாகப் பரிதவிக்கும் மக்களுக்கான விடுதலையை மந்திர தந்திரங்கள் தந்துவிடாது... நிம்மதியான வாழ்க்கை தான் கொடுக்கும் என்பது அவர்களுக்குப் புலப்படத் தொடங்கினாலே போதும், போலிகள் காணாமல் போய்விடுவார்கள்.

நன்றி: ‘இந்து தமிழ் திசை’, 23.7.2024

# பகுத்தறிவு சிந்தனையை வளர்க்கக்கோரி தனி மசோதா

கேரளா, சாலக்குடி தொகுதியில் இருந்து மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பென்னி பெஹனன். காங்கிரஸ் எம்பியான பென்னி பகுத்தறிவு சிந்தனை மற்றும் விமர்சன சிந்தனைகளை ஊக்குவிப்பதற்கான மசோதா 2024-யைக் கடந்த வெள்ளியன்று மக்களவையில் அறிமுகப்படுத்தியுள்ளார்.

இதுகுறித்து பென்னி பெஹனன் கூறுகையில் “சமூகத்தில் அதிகரித்து வரும் மூட நம்பிக்கைகளையடுத்து பகுத்தறிவு சிந்தனையை ஊக்குவிப்பதற்கான அவசரத் தேவை எழுந்துள்ளது. கடந்த 2014 முதல் விமர்சன சிந்தனைகள் ஊக்குவிக்கப்படவில்லை. நான் உயிரியல் ரீதியாகப் பிறக்கவில்லை, கடவுள்தான் என்னை இங்கு அனுப்பினார் என்று மோடி பேசும் நிலையில் பகுத்தறிவு சிந்தனைகளை ஏற்படுத்துவதற்கான முக்கிய மசோதாவாகும் இது.

நாட்டின் முதல் பிரதமரான நேரு தான் பகுத்தறிவு சிந்தனை மற்றும் அறிவியல்



மனப்பான்மையை ஊக்குவித்தார். பாஜ ஆட்சிக்கு வந்த பிறகு, விமர்சன சிந்தனைகள், மாறுபட்ட கருத்துகள் ஏற்கப்படுவது இல்லை. ஏனெனில் பிரதமரும் அவரது கட்சியினரும் பகுத்தறிவில்லாத, மூட நம்பிக்கைகளையே ஊக்குவித்து வருகின்றனர். அரசின் கொள்கைகள், திட்டங்கள், சமூக திட்டங்களில் அனுபவ ஆதாரங்கள், பகுத்தறிவு பகுப்பாய்வை ஊக்குவிக்கும் வகையில் இது கொண்டுவரப்பட்டுள்ளது” என்றார்.

# ஆழ்ந்து உறங்கும் ஒன்றிய சுகாதாரத்துறை

கொரோனா பேரிடருக்குப் பிறகு உலக நாடுகள் அனைத்தும் சுகாதாரத்துறைக்கு அதீத முக்கியத்துவம் கொடுக்கும் மனநிலைக்கு வந்திருக்கின்றன. ஆனால் பாஜக ஆளும் இந்திய ஒன்றியம், கொரோனா பேரிடரில் இருந்து துளியும் பாடம் கற்கவில்லை. நடப்பு நிதியாண்டில் சுகாதாரத் துறைக்கான நிதியை 3 விழுக்காடு குறைத்திருக்கிறது ஒன்றிய அரசு. கடந்த நிதியாண்டில் மட்டும் சுகாதாரத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 10 விழுக்காடு பயன்படுத்தப்படவில்லை. பயன்படுத்தப்படாமல் விடப்பட்ட தொகை ரூ.8,550.21 கோடி.

இது மதுரை உட்பட 16 புதிய எய்ம்ஸ் மருத்துவமனைகளுக்கு ஒன்றிய அரசு ஒதுக்க வேண்டிய தொகையை விட அதிகம். ஒன்றிய அரசு 16 புதிய எய்ம்ஸ் மருத்துவமனைகளுக்கு கடந்த நிதியாண்டில் ஒதுக்குவதாக, நிர்மலா சீதாராமனால் அறிவிக்கப்பட்ட தொகையே ரூ.6800 கோடிதான். வீணாய்க் கிடந்தாலும் பரவாயில்லை, மக்கள் நலனுக்குப் பயன்பட்டுவிடக்கூடாது என்பது மோடி அரசின் எண்ணமா?

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# புதிய குற்றவியல் சட்டங்களின் ஆபத்துகள்
# விளக்கக் கருத்தரங்கம்



**பொள்ளாச்சி:** சமஸ்கிருத பெயரிலான நஞ்சு தடவிய மூன்று குற்றவியல் சட்டங்களை அனுமதியோம்! சிறப்புக் கருத்தரங்கம் 28.07.2024 அன்று பொள்ளாச்சி பர்வானா அரங்கில் நடைபெற்றது.

கருத்தரங்கிற்கு பொள்ளாச்சி யாழ்.வெள்ளிங்கிரி தலைமை தாங்கினார். சபரிகிரி வரவேற்புரையாற்றினார். அரிதாசு முன்னிலை வகித்தார்.

இக்கருத்தரங்கில் கலந்துகொண்ட கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மக்கள் சிவில் உரிமைக் கழக தேசியச் செயலாளர் வழக்குரைஞர் ச.பாலமுருகன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

மேலும் இந்நிகழ்வில் பொள்ளாச்சி நகர மன்றத் தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை துணைப் பொதுச்செயலாளர் கா.சு.நாகராசன், மக்கள் விடுதலை முன்னணி தலைவர் கா.மாரிமுத்து, தமிழ்நாடு தன்னுரிமை மீட்புக் கழகம் வழக்குரைஞர் சேதுபதி, திராவிடர் கழகம் மாரிமுத்து, தமிழ்ப்புலிகள் கட்சி தெற்கு மாவட்டச் செயலாளர் வானுகன், புரட்சிகர இளைஞர் முன்னணி வழக்குரைஞர் மலரவன் ஆகியோர் பங்கேற்று கருத்துரையாற்றினார்கள்.

நிறைவாக வினோதினி நன்றி கூற கருத்தரங்கம் நிறைவு பெற்றது.

இதில் தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி, திருப்பூர் மாவட்டக் கழகத் தலைவர் முகில்ராசு, உடுமலை இயல், ஆனந்த், கணேசு, நடராஜ், மணி, ரூபா மற்றும் தோழமை இயக்கத் தோழர்கள், இளைஞர்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

# கொளத்தூரில் கலந்துரையாடல்;
# மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றம்

**கொளத்தூர்:** கொளத்தூர் நகரக் கலந்துரையாடல் கூட்டம் 27-07-2024 அன்று கொளத்தூர் சோதனைச் சாவடி அருகில் உள்ள பெரியார் படிப்பகத்தில் நடைபெற்றது.



கூட்டத்திற்கு சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் தலைமை தாங்கினார். சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் அன்பு, நங்கவள்ளி பொறுப்பாளர் இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் இயக்க வளர்ச்சி மற்றும் புதியத் தோழர்களை அறிமுகப்படுத்துவது தொடர்பான செய்திகள் பற்றி விவாதிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் கொளத்தூர் நகரக் கழகத்தின் எதிர்காலப் பணிகள் - புதியத் தோழர்களை அமைப்பாக்குவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது..

**மேலும் இந்த கூட்டத்தில் மூன்று முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அது பின்வருமாறு:-**

1. மாதம்தோறும் கலந்துரையாடல் கூட்டம் நடத்துவது.

2. பெரியார் படிப்பகத்தை முறையாக பயன்படுத்தி வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவது.

3. புதிய தோழர்களைச் சந்தித்து அவர்களுடன் கழகம் - பெரியாரியல் குறித்து எடுத்துக்கூறி அமைப்பாக்குவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது..

கூட்டத்தின் முடிவில் பெரியார் இயக்கத்தின் அடிப்படையைப் புரிந்து கொள்ள ஏதுவாக இட ஒதுக்கீடு உரிமைப் போராட்ட வரலாறு, இந்து மதமும் தமிழர்களும், வரலாற்றில் பார்ப்பனிய வன்முறைகள், திராவிடர் இயக்க வரலாற்றுச் சுருக்கம் (1912-1973), பெரியாரும் அம்பேத்கரும் இன்றைய பொருத்தப்பாடு, ஞான சூரியன், பெரியாருக்கு எதிரான முனை மழுங்கும் வாதங்கள் உள்ளிட்ட நூல்கள் கழகத் தோழர்களுக்கு வழங்கப்பட்டது.

நிறைவாக பிரபு பாலச்சந்தர் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

கூட்டத்தின் கலந்துரையாடல் கூட்டத்தில் பேசப்பட்டவை குறித்து சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் அண்ணாதுரை, மே.கா.கிட்டு ஆகியோருடன் கலந்து ஆலோசனை செய்யப்பட்டது.

இதில் கொளத்தூர் சி. இராமமூர்த்தி, கொளத்தூர் சஞ்சய் குமார், கொளத்தூர் கோபி கிருஷ்ணன் ராஜா, கொளத்தூர் கோபால கிருஷ்ணன், நங்கவள்ளி G.ராஜேந்திரன், கத்திரிப்பட்டி A. பழனியப்பன், கொளத்தூர் ப. குமார், கொளத்தூர் பா. அறிவுச்செல்வன் ஆகியோர் பங்கேற்றனர்.

# பகுத்தறிவாளர் வி.பி.சண்முகசுந்தரம் மறைவு; கழகத் தலைவர் மரியாதை

**கோபி :** மேனாள் நாடாளுமன்ற உறுப்பினரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான சீரிய பகுத்தறிவாளர் வி.பி. சண்முகசுந்தரம் 20.07.2024 அன்று முடிவெய்தினார்.



இந்நிலையில் 28.07.2024 அன்று கோபியில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்ற கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அவரது உருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து அவரது குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்துக் கொண்டார்.

மேலும் அன்பழகன் IAS, மதிமுக மாவட்டச் செயலாளர் கந்தசாமி, கழக வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன், வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் செல்வக்குமார் உள்ளிட்ட கழகத் தோழர்களும் ஆறுதல் தெரிவித்தனர்.

# ரூ.5,000 வளர்ச்சி நிதி



கோபி : ஓய்வுபெற்ற வேளாண் இயக்குநரும், கழக முன்னோடியுமான ஆசைத்தம்பி - கற்பகம் இணையரின் மகளான தமிழ்ப்பாவை - அருண் இணையருக்கு அண்மையில் ஆண் குழந்தை பிறந்தது. இதனையொட்டி 28.07.2024 அன்று கோபியில் உள்ள அவரது இல்லத்திற்குக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நேரில் சென்று வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

குழந்தை பிறந்ததன் மகிழ்வாக கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக ரூ. 5000/-யைக் கழகத் தலைவரிடம் வழங்கினார்கள்.

# கழகத் தோழர் மதிவாணன் முடிவெய்தினார்



**கோவை :** வட சென்னையில் வசித்து வந்த கழகத் தோழர் மதிவாணன், 28.07.2024 அன்று அவரது இல்லத்தில் மாரடைப்பு ஏற்பட்டு திடீரென முடிவெய்தினார். அவரின் பூர்வீகம் கோவை என்பதால் அவரது உடல் கோவைக்கு எடுத்துச் செல்லப்பட்டு கோவை குறிச்சி அண்ணா நகரில் உள்ள மயானத்தில் எந்தவித மதச் சடங்கு சம்பிரதாயங்களின்றி உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இறுதி நிகழ்விற்கான ஏற்பாடுகளை கழக கோவை மாநகரத் தலைவர் நிர்மல்குமார், வட சென்னை மாவட்ட அமைப்பாளர் சேத்துப்பட்டு இராசேந்திரன், கழக மாநகர அமைப்பாளர் கிருட்டிணன், கழகத் தோழர் சதிஷ்குமார் ஆகியோர் மேற்கொண்டனர்.

தோழரின் உடலுக்கு கோவை மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் சந்திரசேகர், குமரேசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி செந்தில்குமார் ஆகியோர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

தோழர் மதிவாணன் பெரியாரியலை வாழ்வியலாக ஏற்றுப் பணியாற்றி வந்தவர் என்பதால் அவரது உடலை எந்த மதச் சடங்கு சம்பிரதாயங்களின்றி அடக்கம் செய்ய அவரது குடும்பத்தினர் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காமல் முழு மனதுடன் ஒப்புக் கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : August 01, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran